RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s120

OPEN ACCESS

# ஹமீதா நாவலில் பெண்ணியமும் இஸ்லாமியச் சிந்தனைகளும்

**அ. சையது அலி பாத்திமா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642154, தமிழ்நாடு,

# Feminism and Islamic thoughts in Hameeda's novel

**A. Syed Ali Fatima** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642154, Tamil Nadu, India

* Corresponding Author: rrnexgen@gmail.com

Received: 04-11-2020
Revised: 08-06-2021
Accepted: 11-06-2021
Published: 14-06-2021

Check for updates

**ABSTRACT**

Even in this age of progress, there are misconceptions about Islamic women in various societies. This article is designed to emphasize that the idea that women are oppressed in Islamic society and not given adequate privileges and rights in their lives is completely wrong. The main purpose of this article is that hameeda's novel is known thatwomen have the same right as they have duties. Hameeda's novel has also emphasized that Islam has given women the right to equality, property rights, free speech, copyright, succession, the right to divorce, remarriage and the right to education. The main objective of this article is to highlight this.

**Keywords:** Hameeda's novel, Islam, Islamic Women, Islamic Women's Rights.

## முன்னுரை

அனைத்து மதங்களும் சமயங்களும் பெண்ணியத்திற்கு எதிரானவை என்ற கருத்து சில பெண்ணியவாதிகளால் முன் வைக்கப்படுகின்றது. அதிலும் இஸ்லாம் சமயம், பெண்களை கொத்தடிமைகளாக நடத்துகிறார்கள் என்ற தவறான கருத்துக்களும் பல பெண்ணியவாதிகளிடமும் பெண்ணிய இயக்கங்களிடையே முன் வைக்கப்படுகிறது.ஆனால் உண்மையாக இஸ்லாம் சமயத்தில் பெண்கள் போற்றப்படுகிறார்கள் என்ற உண்மையை ஹமீதாவின் உயிரோவியம் உனக்காகத்தான் என்ற நாவலின் மூலம் சில கருத்துக்களை இக்கட்டுரையில் காணலாம்.

## பெண் சிசுக்கொலை மாபெரும் குற்றம்

நபிகள் நாயகம் தோன்றுவதற்கு முன்பு அரபு தேசத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால் அவற்றை உயிரோடு புதைக்கும் பழக்கம் இருந்துவந்துள்ளது. இதுபற்றிக் குர்ஆனில் இறைவன் கீழ்வருமாறு கூறுகின்றான்.

"அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாக நற்செய்தி கூறப்பட்டால் அவன்முகம் கறுத்து விடுகிறது. அவன் கோபமுடையவன் ஆகிறான். திருக்குர் ஆன் (16.58) நற்செய்தி என்று பெண் குழந்தையின் பிறப்பை இஸ்லாம் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாம் தோன்றிய பின் பெண் குழந்தை பிறந்தால் வீட்டில் செல்வம் பெருகும் (பர்க்கத்) என்ற பிண்ணம் தோன்ற ஆரம்பித்தது. பெண் குழந்தைகளை கொல்வது இஸ்லாமிய சமூகத்தில் மாபெரும் குற்றமாகக் கருதப்படுகின்றது (Achari, 2012).

இதனை ஹமீதா தன் நாவலில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஹசீனா என்ற பெண் திருமணமாகி தான் கருவுற்ற நிலையை உணர்ந்ததும் அடுத்து அவள் காதில் கேட்கும் அதிர்ச்சித் தகவல் தன் கணவனின் இறப்புச் செய்தி. தன் கணவனின் இறப்பிற்கு இக்கரு தன் வயிற்றில் உருவானதே காரணம் என்று தவறாக் எண்ணுகின்றாள். கருவில் உதித்ததுமே தன் கணவனை காவு வாங்கிய இக்குழந்தை தனக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறாள். கருவைக் கலைக்க வேண்டும் என்ற தீர்க்கமான எண்ணத்தை தன் பெற்றோரிடம் தெரிவிக்கிறாள். இதற்கு ஹசீனாவின் தந்தை கூறியதாவது.

“உண்டான குழந்தையை கலைக்கிறது இஸ்லாத்துல இல்லை. இஸ்லாத்துக்கு எதிராக நான் எதுவும் செய்யத் துணிய மாட்டேன். என் மகளான உன்னை அப்படி ஒரு பாதகத்தை செய்ய அனுமதிக்கவும் மாட்டேன்”

இவ்வாறு தந்தை கூறியதை அடுத்து தந்தையையும், இஸ்லாம் சட்டத்தையும் மீறி எதுவும் செய்ய வழி இல்லாமல் குழந்தையைப் பெறுகிறாள். நாவலில் இடம் பெறும் இச்செய்தியின் மூலம் இஸ்லாம் சமூகத்தில் சிசுக் கொலை அனுமதி இல்லை என்ற கருத்து முன் வைக்கப்பட்டுகிறது (Hameeda, 2016).

## இஸ்லாமிய சமூகத்தில் மஹர் என்கிற திருமணக்கொடை குறித்த செய்திகள்

பொதுவாக இஸ்லாமிய கமூகத்தில் வரதட்சணை கொடுமை இருப்பதாக பரவலாக பல வதந்திகள் பரவி வருகின்றன. பல சமூகத்திலும் வரதட்சனை என்பது சர்வ சாதாரணமாக நிலவி வரும் இக்காலச் சூழலில் அதனை கட்டுப்படுத்தும் வகையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளது. இருந்தும் இக்கொடுமை நடந்து கொண்டுதான் இருக்கிறது. பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணின் திருமணத்தின் போது கணவன் கைவிட நேர்ந்தால் பாதுகாக்க ஒரு தொகையை அந்தஸ்துக்கு ஏற்ப ஒதுக்கினார்கள். இதுவே ‘சுல்கம்’ என்று கூறப்பட்டது. இதுவே பிற்காலத்தில் வரதட்சணையாக வளர்ந்தது (Achari, 2012).

இஸ்லாமியச் சமூகத்தில் வரதட்சணை என்ற சொல்லுக்கே இடமில்லை. மாறாக ஆண்வீட்டார்தான் பெண்ணைத் திருமணம் செய்யும்பொழுது மஹர் (சிறுதொகை அல்லது ஆபரணம்) கொடுத்து திருமணம் செய்து கொள்வார்கள். இதனை குர்ஆன் வசனம் 4.4 கூறுகிறது. நீங்கள் மணம் செய்து கொண்ட பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கொடை) களை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள் அதிலிருந்து ஏதேனும் ஒன்றை உங்களுக்குக் கொடுத்தால் அதனை தாராளமாக மகிழ்ச்சியுடன் புசியுங்கள் (திரு குர்ஆன் வசனம் 4.4)

இவ்வாறு திருமணம் என்பது மஹர் கொடுத்து பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை திருக்குர்ஆன் வழி அறிய முடிகின்றது.

இதனை ஹமீதா தன் நாவலில் சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆணும் பெண்ணும் திருமணம் குறித்து உரையாடும் உரையாடலாக இதனைக் குறிப்பிடுகிறார். “இஸ்லாத்தில் ஆண் தான் பெண்ணுக் மஹர் கொடுத்து கல்யாணம் பண்ணனும். பெண் ஆணுக்கு வரதட்சணை கொடுக்கனும்னு ஒரு இடத்துல கூட சொல்லப்படல” இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் (ஹமிதா, 2019).

இதன்மூலம் இஸ்லாமிய சமூகத்தில் உள்ள பெண்களுக்கு எந்த இன்னல்களும் இல்லாமல் பாதுகாக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்மை பற்றிய உயர்வான சிந்தனை

”அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பதில் தாய்மைக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. தாய்மை என்ற உறவு உலகிலேயே மிகவும் புனிதமான உறவு. ‘பெத்த மனம் பித்து

பிள்ளை மனம் கல்லி' என்னும் பழமொழிக்கேற்ப தாய்மை என்பது அன்பைத் தவிர வேறு எதுவும் அறியாதது. தாயிற்சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வரிகளில் தாயின் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது.இஸ்லாமும் தாய்மைக்கு மிகுந்த சிறப்பை அளிப்பதில் பெருமிதம் கொள்கிறது. தாயின் பாதத்தின் கீழ் பிள்ளைகளின் சொர்க்கம் இருக்கிறது எனக் கூறித் தாயின் பெருமையைப் புகழ்ந்துரைத்தார்கள் நபிகள் நாயகம்.

தாய்மையின் சிறப்பு நாயக வாழ்வில் நிகழ்ந்த மற்றுமொறு நிகழ்ச்சி இனிதின் விளக்கும். பெருமானாரை நோக்கி நாயகத் தோழர் அப்துல்லா இப்னு மசூது (ரலி) அவர்கள், அனைவரையும் விட மிகுதியான மரியாதை தந்து போற்றுதற்குரியவர் யார்? என்று கேட்டபோது பெருமானார், உன்னுடைய தாய் என்று பதிலிறுத்தார்கள். அவர்க்கு அடுத்து என் பெரு மரியாதைக்குரியவர் யார்? என அவர் கேட்க மீண்டும், 'தாய்' என்று விடை கூறினார்கள்.

இப்படியே மூன்று முறை அவர்கள் கேட்க மூன்று முறையும் தாய் என்றே பதிலளித்த பெருமானார் நான்காம் முறாஇயாகவும் அதே கேள்வியை அவர் கேட்க 'உன் தந்தை' என்று பதில் கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் இருந்து தாய்மைக்கு இஸ்லாம் அளிக்கும் மதிப்பு இனிதில் புலனாகும் (ஆச்சாரி, 2012).

இதனை ஹம்தா தன் நாவலில் எடுத்தாண்டுள்ள விதம் கவனிக்கத்தக்கது. சிறுவயதில் இருந்தே அம்மாவின் வெறுப்பை மட்டும் அனுபவித்த அக்குழந்தை தன் நானா (தாயின் அப்பா) அவரிடம், ஏன் அம்மா என்னை அன்பாக கவனிப்பதில்லை, ஏன் அம்மா என்னை வெறுக்கிறார் என்பதற்கு அவர் கூறும் பதில்,

'தங்கம்! அல்லாஹ் சொல்றான்... தாயின் காலடியில் தான் சொர்க்கம் இருக்காம். அதனால் அம்மா நம்மை திட்டினாலும் கோபிச்சாலும் பொறுத்துக்கணுமாம். அப்படிப் பொறுத்துக்கிட்டா அல்லாஹ்வுக்கு ரொம்ப சந்தோஷம் ஆகிடுமாம்" (உயிரோவியம் உனக்காகத்தான், ஹமீதா ப. எண்.56) என்று குழந்தைக்கு தாயின் பெருமையை எடுத்துக் கூறும் வகையில் ஹமீதா கூறியுள்ளது மிகச் சிறந்த தாய்மை குறித்த இஸ்லாமியச் சிந்தனை ஆகும்.

## மனைவியின் சிறப்புப் பற்றி இஸ்லாம் கூறும் செய்திகள்

" உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியின் பார்வையில் சிறந்தவரே!" (திர்மிதி நபி மொழித்தொகுப்பு)

" உங்கள் பொருள்களில் மிகச் சிறந்தது உங்கள் மனைவிக்கும் மக்களுக்கும் செலவிடப்பட்ட பொருளே!"

நபிகள் நாயகம் மனைவியைக் குறித்த பொன் மொழிகளில் சில இங்கு நினைவு கூறத்தக்கது.

" மனிதன் பெறக்கூடிய இறையருட் பேருகளில் எல்லாம் உயர்ந்தது சிறந்த மனையாளே!"

" கற்பிற் சிறந்த நல்ல மனைவியை விடச் சிறந்த செல்வத்தை ஓர் ஆண்மகன் பெற முடியாது" இப்னு 'மாஜா' - நபிமொழித் தொகுப்பு

" மறுமை நாளில் இறைத் தொழுகைக்கு அடுத்தத்தாக மனைவியரிடம் அழகிய முறையில் நடந்தது பற்றியே இறைவன் கணவனைக் கேள்விக் கணக்கு கேட்பான்" (முஸ்லிம் நபிமொழித் தொகுப்பு)

இதனைக் குர் ஆன் கீழ்வறுமாறு குறிப்பிடுகிறது

" நீங்கள் மனைவியருடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள், நீங்கள் அவர்களை வெறுத்தால் அது முறையல்ல, ஏனெனில் நீங்கள் ஒன்றை வெறுக்கலாம். நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அநேக நன்மைகளை அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கலாம்" (திருக்குர் ஆன் 4.19)

இவ்வாறாக மனைவியின் முக்கியத்துவம் குறித்து இஸ்லாம் குறிப்பிடுகிறது. இது குறித்த செய்தியை ஹமீதா அவர்கள் தனது நாவலில் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கதாகும்.

ஜிம்மா நாளன்று வயதான முதியவர் தொழுகை முடித்து வரும் மதிய வேளையில் வீட்டின் முன் வாயில் அருகே வரும் பொழுது தன் மனைவி செய்யும் சமையலின் வாசம் இவரை ஈர்க்க" குருமா வாசனை கேட் வரை அடிக்குது அப்படி என்னத்தான் அரைச்சு ஊத்துவியோ?"

தானும் தொழுகை முடித்து கணவருக்கு உணவை தயாராக எடுத்துவைத்துக் கொண்டிருந்த மனைவியை லேசாக கேலி செய்தார்.அதற்கு அவர் "அதுவா, கொஞ்சம் அன்பு, பாசம், அக்கறை எல்லாம் அரைச்சு ஊத்தினாதான் அப்படி மணக்கும் வெறும் மசாலா வாசனைன்னு நெனச்சீங்களா?" மூமினாவும் சளைக்காமல் பதில் கொடுத்தார். "நீயும் உட்காரு சேர்ந்து சாப்பிடலாம்" மனைவியையும் அருகில் அமர்த்திக்கொண்டார். (உயிரோவியம் உனக்காகத்தான் - ஹமீதா, ப. எண்.68)

வயதான காலத்தில் கணவனும் மனைவியும் அன்பை பரிமாறிக் கொள்வதிலும் சரிசமமாக உணவு உண்ணும் நிகழ்வுகள் மூலமாகவும் ஹமீதா கணவன் மனைவி உறாவின் அன்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றார். மேலும் இதுபோன்ற கருத்துக்களை தனது நாவலில் கூறியிருப்பது இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் இன்னல்களுக்காளாக்கப்படுகிறார்கள் என்ற சிலரது எண்ணங்களை உடைத்தெறியும் வகையில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பு மிக்கதாகும்.

## முடிவுரை

இக்கருத்துக்கள் மூலமாக இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த பெண்கள் போற்றப்படும் செய்தியினை திருக்குர்ஆன் வசங்கள் மூலமாகவும், நபிகள் நாயகத்தின் பொன்மொழிகள் மூலமாகவும் இதனை ஹமீதா தன் நாவலில் எடுத்தாண்டுள்ள தன்மை குறித்தும் விரிவாக கூறப்பட்டுள்ளது.இஸ்லாமியக் கோட்பாடு பெண் முன்னேற்றச் சிந்தனைகளை மையமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை ஹமீதாவின் புதினம் வழி அறிய இயலுகிறது. மேலும் பெண்கள் முன்னொரு காலத்தில் அடிமைகளாகவும், போகப்பொருளாகவும் கருதப்பட்ட நிலையில் இக்காலப்பெண்கள் அதிலிருந்து மீண்டு வந்து சிறந்து விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

## References

Achari, (2012) 21st Nootrandil Penniyam, Siragu Magazine Publisher, Chennai India.

Hameeda, (2016) Uyiroviyam Unakkaagathaan, Subam Publications, Chennai India.

Hameeda, (2019) Uyiroviyam Unakkaagathaan, Subam Publications, Chennai India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License